டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 | ஆவணி 10 | ஷவ்வா 25 | இதழ் 193
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 26-8-1981

நல்லூர்க் கந்தசுவாமி
கோவில் உற்சவத்தில்
மலிவு விற்பனை
FIBRE GLASS நுண்ணிழைக் கண்ணாடியில் செய்யப்பட்ட நாகரிகமான வீட்டுத்தளவாடங்கள், பூச்சாடிகள், சமயலறை-குளியலறை உபகரணங்களுக்கு——
நல்லூர் காட்சிச்சாலை
ஆதீனத்துக்குமுன்
நல்லூர்
FIBERITE MOULDINGS
தம்பசிட்டி, பருத்தித்துறை.
Phone: 590. [0689]

## மா. அ. சபை மூலமே வேலை வாய்ப்பு! தலைவர் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

"வேலைவாய்ப்பு சம்பந்தமான அதிகாரம் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு வருவதால், எந்த நியமனங்களும் அபிவிருத்தி சபைக்கூடாகவே வழங்கப்படவேண்டும்.''

வேலைவாய்ப்பு சம்பந்தமாக திரு. நடேசு கேட்ட கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது சம்பந்தமாகச் சகல திணைக்களங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட சபைத் தலைவர் தெரிவித்தார்.

ஒருவருக்கு ஒரு திணைக்களத்திலிருந்து வந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் ஒன்றையும் திரு நடேசு சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார். (மா)

## யாழ். மாவட்ட அபிவிருத்திவேலைகள் சபை தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

பொருட்களின் விலை தினம்தினம் அதிகரித்துக் கொண்டு செல்வதாலும், ஒப்பந்தக்காரர்கள் வேலைகளைப் பொறுப்பேற்க முன் வராததாலும், 50 ஆயிரம் ரூபா மதிப்பீட்டுக்கு உட்பட்ட யாழ். மாவட்ட அபிவிருத்தி வேலைகளைக் கேள்வி விண்ணப்பம் கோராமலேயே கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூகநிலையம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம் போன்ற பொது ஸ்தாபனங்களுக்கு வழங்க வேண்டும்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் இப்பிரேரணையைக் கொண்டுவந்தார்.

சபை இப்பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

யாழ் மாவட்டசபைத் தலைவர் திரு எஸ் நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. [மா]

★ கட்சி இடைநீக்கத்தை ஆட்சேபித்து

# மைத்திரி, அனுரா வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த பதின்மூன்று முக்கியஸ்தர்கள், கட்சியின் நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதை ஆட்சேபித்து திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா, ஜனாப் ஹலீம் இஷாக், திரு. ஸ்டான்லி திலகரத்ன ஆகிய நால்வர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல்செய்தனர்.

தாங்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதற்குத் தடை உத்தரவு விதிக்குமாறு இவர்கள் தங்களது மனுவில் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர்.

அண்மையில் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகாவினால் கூட்டப்பட்ட விசேட மகாநாட்டில், திரு மைத்திரிபால சேனநாயகா, திரு அனுரா பண்டாரநாயகா, ஜனாப் ஹலீம் இஷாக், திரு ஆர் பி விஜேசிறி, ஜனாப் அலவி மௌலானா, ஸ்டான்லி திலகரத்ன, திரு பி பி ஜி தென்னகோன் உட்படப் பதின்மூன்று பேர் கட்சியின் நடவடிக்கைகளிலிருந்து தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

## இன்று அமிருக்கு 55 வயது

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு அ. அமிர்தலிங்கம் இன்று தனது 54வது பிறந்த தினத்தை அமைதியுடன் கொண்டாடுகின்றார். [மா]

# சென்னை தனபதி மரணம்: கொலை என்று தீர்ப்பு

## பூதவுடல் சென்னைக்கு அனுப்பப்பட்டது

[கொழும்பு]

இலங்கை வந்திருந்த இந்திய உல்லாசப் பயணி என். தனபதியின் மரணம் கொலையென்று நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கொலையுண்ட என். தனபதியின் பூதவுடல் நேற்று விமான மார்க்கமாகச் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை, கதிர்காமத்திலிருந்து 43 பேரடங்கிய உல்லாசப் பயணிகள் கோஷ்டி கொழும்பு திரும்பிக் கொண்டிருந்தபோது பயணஞ்செய்த பஸ், திஸ்ஸமஹாருமையில் பழுதடையவே, உல்லாசப் பிரயாணிகளில் ஒருவரான சென்னையைச் சேர்ந்த திரு என் தனபதி தனது நண்பர் ஒருவருடன் அருகிலுள்ள சிகை அலங்காரிக்கும் நிலையத்திற்கு முகச் சவரம்செய்யும் நோக்குடன் சென்றபோது சிலரினால் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானது தெரிந்ததே.

இவரது மரணம் குறித்து நேற்று நடைபெற்ற மரண விசாரணையின் முடிவில், கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனபதியின் சடலம் நேற்று பிற்பகல் 2-30க்கு விமான மார்க்கமாக சென்னைக்கு அனுப்பப்பட்டது.

### ஜனாதிபதிகவலை

இச்சம்பவம் குறித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு தோமஸ் ஏபிரகாமுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது கவலையைத் தெரிவித்துக் கொண்டார்

## விமான நிலையத்தில் அமைச்சர்கள் அஞ்சலி!

சென்னை, ஆக. 25

திஸ்ஸமஹாருமையில் கொலையுண்ட என். தனபதியின் பூதவுடல் இன்று பிற்பகல் சுமார் 3-30 மணியளவில் சென்னை மீனம் பாக்கம் விமான நிலையம் வந்து சேர்ந்தது

பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அமைச்சர்கள், உறவினர்கள் ஆகியோருடன் பெருந்திரளான மக்களும் விமான நிலையத்தில் கூடி நின்றனர்

முதலில் அமைச்சர்கள் பலர் மலர் வளையங்களைச் சாத்தியதைத் தொடர்ந்து பொதுமக்கள் மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலிசெலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து தனபதியின் பூதவுடல் அவரது சொந்த ஊரான திருவொற்றியூருக்கு மோட்டார் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

## யாழ். மாநகர கீதம் தெரிவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றக்கீதமாக கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையால் இயற்றப்பட்ட கீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கு 19 பேர் கீதங்களை அனுப்பியிருந்தனர். நால்வர் தெரிவுக்குழு காரை சுந்தரம்பிள்ளையின் கீதத்தைத் தெரிவு செய்துள்ளது.

இத்தெரிவுக்குழுவில் கலாநிதி ஆ சண்முகதாஸ், திரு க. சொக்கலிங்கம், திரு ம. விக்டர், செல்வி இ. சபாபதி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இக்குழு இம்மாதம் 21-ம் தேதி யாழ். மாநகராட்சி மன்ற கீதத்தைத் தெரிவு செய்தது.

குரும்பசிட்டி அடைவு கடை நகை:

## அடையாளம் காட்ட 23 தினங்கள் அலைந்தனராம்

[மாவிட்டபுரம்]

குரும்பசிட்டி அடைவுக்கடைக் கொள்ளையை அடுத்து மீட்கப்பட்ட நகைகளில் ஒரு பகுதி அடைவு வைத்தவர்களால் அடையாளம் காட்டப்பட்டது

குரும்பசிட்டி அடைவுகடை கொள்ளையை அடுத்துத் தீவிர விசாரணைசெய்த பொலிஸார் ஒரு பகுதி நகைகளை மீட்டிருந்தனர். இந்நகைகளில் சில காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து அடைவு வைத்தவர்கள் அழைக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டன.

மிகுதி நகைகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கடந்த சில தினங்களாக அடையாளம் காண்பது இடம்பெற்றது. குரும்பசிட்டி அடைவு கடையில் 278 பேர் அடைவு வைத்திருந்தனர். மீட்கப்பட்ட நகைகளை சுமார் 100 பேர்வரை அடையாளம் காட்டினர், மிகுதிப்பேர்களது நகைகள் அகப்படவில்லை.

அடையாளம்காட்டியவர்கள் தமது எல்லா நகைகளும் இருக்கவில்லை என்றும் தாம் அடைவு வைத்தவற்றில் சில நகைகளே இருந்தன என்றும் தெரிவித்தனர். நகை அடையாளம் காண்பதற்கு 23 தினங்களாக யாழ். பொலிஸ் நிலையத்திற்கு பொது மக்கள் அலைந்து திரிந்தனராம். [அ]

## ஆசிரியர் சங்கம் வாழ்த்து

[யாழ்ப்பாணம்]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் 54வது பிறந்ததின விழாவை ஒட்டி தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்

(6-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைத் தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## 15 பொலிசார் யாழ். திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து யாழ் மாவட்டத்திலிருந்து லீவு எதுவும் எடுக்காது தமது சொந்த ஊர்களுக்குச் சென்ற பொலிசாரில் 15 பேர் நேற்று யாழ். திரும்பி தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர். [இ]

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

சாவகச்சேரியில் இயோர்றர் பிஸினஸ் விற்பனைக்குண்டு. பிரவேட்டு இரவு 7 முதல் 8 வரையும் நேரில் சந்திக்கலாம். த. K. T. கணேசன், கேவ் னிலா, சாவகச்சேரி. 0707

### தேவை

மண்டைதீவு இலங்கை வானொலி அஞ்சல் நிலையத்துக்கு சமையலுக்கு ஆள் தேவை. உடன் நேரில் வரவும். பொறுப்பிலாளர் அதிபர். வானொலி நிலையம் மண்டைதீவு. 0728

### கல்வி

அச்சுவேலியில் புதிதாக திறக்கப்படவிருக்கும் பொறியியல் கல்விநிலையத்தில் பின்வரும் கலைகள் பயில விரும்புவோர் செயம் பார்மசி, அச்சுவேலி என்ற இடத்தில் தொடர்பு கொள்ளவும். மின்பொறியியல், மோட்டார் வாகன பொறியியல், பெண்களுக்கான தொழில்முறை இரசாயனம், கடிதத் தொடர்பு S. C. இம்மானுவேல், பொறியியலாளர். முதலியார் வளவு, அச்சுவேலி. [0717]

ஏல விற்பனை

உரம் - இருமிநாசினி கள் - தெளிகருவி - மற்றும் தளபாடங்கள் எதிர்வரும் சனிக்கிழமை (29-8-81) காலை 9-30 மணிக்கு புத்தூர் கமநலச் சேவை நிலையத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். அலுவலக நேரங்களில் பொருட்களைப் பார்வையிடலாம்.

D. O.
A. S. C. புத்தூர்
0733


# எம். பியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு பயிர்ச் செய்கை உத்தியோகத்தரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோப்பாய் வடக்கு வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம் கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரத்திற்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

பயிர்ச்செய்கைக்குழு உத்தியோகத்தர் இல்லாத விவசாயிகள் கஷ்டப்பட வேண்டிய நிலைமை இருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச]

# "வகுப்பு வாதத்துக்கு எதிராக ஜனநாயக முற்போக்கு சக்திகள் போராடவேண்டும்"

## — உழைக்கும் மக்கள் கட்சி

(கொழும்பு)

"உண்மையின் பக்கம் நிற்பவர்களும், சமாதானத்தை விரும்புபவர்களும், வன்செயல்கள் யார் மீது ஏவப்பட்டிருந்தாலும் அதனை கண்டிக்க வேண்டும்"

உழைக்கும் மக்கள் கட்சி செயலாளரும், இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்க தலைவருமான திரு. எச். என். கே. சரவிட்ட வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"இப்படியான வன்செயல்கள் ஐக்கியத்திற்கு ஊறு விளைவிப்பதோடு, தொழிலாளர் வர்க்கத்தினதும், பொது மக்களினதும் நலன்களை பாதிப்பதாகும்.

"எமது கட்சி, நாட்டிலுள்ள சகல சிறுபான்மையினரும், நாட்டின் எந்தப்பாகத்திலும், பெரும்பான்மையினத்தவர் அனுபவித்து வரும் அத்தனை உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

"ஆண்டாண்டு காலமாக இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளார்கள். இனக்கலவரம் உருவாகும் போது தற்காலிக பதட்ட நிலைமை அது இவர்களுக்கிடையே உருவாகி வந்தது. ஆனால் 1977ம் ஆண்டுக்குப் பின்னர், தமிழ் சிறுபான்மையினர், அமைதியுடன் வாழ்ந்து தங்கள் கன்றுட கடமைகளை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அண்மையில் நடந்த கலவரத்தின் போது மூர்க்கத்தனமான இனவாதத்திற்கு குறிப்பாக அப்பாவி இந்திய வம்சாவழியினர் பலியானார்கள். இவர்கள்தான் இந்நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காளிகளாக இருந்தார்கள் என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும். நாட்டின், அரசியல், சமூக வாழ்க்கையின் பிரதான ஓட்டத்திலிருந்து இவர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர்.

"அண்மையில் ஏற்பட்ட கலவரங்கள், அரச விரோத சக்திகளால் நடத்தப்பட்டதாக அரசு கூறுகிறது. ஆனால் அரசின் பங்காளிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேறு விதமாக கருத்து கூறுகிறது.

இச்செயல்களுக்கு எதிராக பிற்போக்கு வாதிகள் இருக்கிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆதலால் சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து ஐக்கியப்பட்டு கருப்புவாதத்திற்கு எதிராக போராட முன்வரவேண்டும். (ச)

# பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்


பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று

காலஞ் சென்ற இரத்தினசபாபதி அருள் ஞானத்தின் மரண சாதனமில்லாச் சொத்து விடயமாக.

மயில்வாகனம் இரத்தின சபாபதி கைப்பெண் ஞான பரமேஸ்வரி கிழக்கு ரோட்டு வல்வெட்டித்துறை

மனுதாரர்

தத்துவநியாய

நிக்க இலக்கம் 1118.T.

1. இரத்தினசபாபதி சிவ ஞானம்
2. இரத்தினசபாபதி தன ஞானம்
3. இரத்தினசபாபதி குல ஞானம்
4. பாலசுந்தரம் இராசேஸ்வரி
5. பெண் யோகம்மா
6. இரத்தினசபாபதி மகள் நமணியம்மா யாவரும் கிழக்கு ரோட்டு, வல்வெட்டித்துறை

எதிர்மனுதாரர்

மேலே இலக்கம் கொண்ட மரணச் சொத்தை நிருவகிப்பதற்கான வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரண சாதன மற்ற சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆட்களெவரும் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுமானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்
0720


# காவ்நடைத்திருட்டு அதிகரிப்பு

(மன்னார்)

தலைமன்னார், பேசாலை ஆகிய பகுதிகளில் கால்நடைத் திருட்டு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மாடுகளின் மேய்ச்சலுக்குச் செல்லும் கால் நடைகளை திட்டமிட்ட கோஷ்டி ஒன்று திருடிச்செல்வதாக நம்பப்படுகிறது. (அ)

# மகளிர் சங்கத்துக்கு அமைச்சு உதவி

(பண்டத்தரிப்பு)

சில்லாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு, விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக 4 ஆயிரத்து 100 ரூபாவை கிராம அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளது.

கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கராவின் விசேட பணிப்புரையின் பேரில் வழங்கப்பட்ட இந்த நிதியுதவி, சங்கத்தின் வீட்டுத்தோட்ட செய்கைக்கும் இருமிநாசினி தெளிகருவி கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான காசோலையை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவா கடந்த வாரம் சில்லாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவி திருமதி பேர்லி அந்தனிப்பிள்ளையிடம் கையளித்தார்.

# நியமனம்

[பண்டத்தரிப்பு]

இலங்கை செல். ஜோசப் சவுன்சில் மத்தியகுழு உறுப்பினராக செல். ஜோசப் அம்புரோஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் கந்தன் இன்னாசித்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வட இலங்கை சுதேச வைத்திய சபையின் செயலாளராகவும் யாழ். சித்த ஆயுர்வேத கல்லூரி விரிவுரையாளராகவும் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவராகவும், சில்லாலை கதிரைமாதா ஆலய பங்குச் சபையின் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

சங்கானை ... பிரதேச சாரணர் ... பொருளாளராகவும் யாழ் மாவட்ட சமூக ... செயற்குழு உறுப்பினராகவும் டாக்டர் ... இன்னாசித்தம்பி பணியாற்றி வருகின்றார்.

# பேசாலை ஆஸ்பத்திரி பெண்கள் வார்டின் அவலம்

(மன்னார்)

ஊழியர் பற்றாக்குறையினால் பேசாலை அரசினர் வைத்திய சாலையில் உள்ள பெண்கள் வார்ட் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையில் இரு பெண் ஊழியர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர். இவ்விருவரில் ஒருவர் பிரசவ லீவிலும் மற்றவர் தமது வீட்டில் ஏற்பட்டுள்ள மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்காகவும் விடுமுறையில் சென்றுள்ளனர். இதனால் பெண்கள் வார்ட்டில் கடமையாற்ற பெண் ஊழியர்கள் இல்லாதிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை முதல் கடந்த வியாழக்கிழமை வரை பகலில் மட்டும் பெண்கள் வார்ட்டில் ஒரு பெண் ஊழியர் கடமையாற்றினார். இரவில் பெண் ஊழியர்கள் இல்லாதிருந்தது. கடந்த வெள்ளிக்கிழமை இரவும் பகலும் பெண்கள் வார்ட்டில் கடமையாற்ற பெண் ஊழியர்கள் ஒருவரும் இல்லாதிருந்தது. இதனால் கடந்த சில நாட்களாகப் பெண்கள் வார்ட்டில் எந்த நோயாளியும் அனுமதிக்கப்படவில்லை. வார்ட்டில் அனுமதிக்கப்பட வேண்டிய பெண் நோயாளிகள் மன்னார் அரசினர் ஆஸ்பத்திரிக்கும் வைத்தியசாலைக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டனர்.

தற்காலிக பெண் ஊழியர்களை அனுப்பிவைக்குமாறு பேசாலை அரசினர் வைத்தியசாலை நிர்வாகம் மேலிடத்துக்கு அறிவித்தும் பெண் ஊழியர்கள் அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பேசாலை அரசினர் வைத்தியசாலையிலுள்ள பெண்கள் வார்ட் மூடப்படும் அபாயம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. (அ)

# நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை இலங்கை மாதா கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு மின்னொளி வழங்குவதற்கும் கட்டிட தொடர் வேலைகளை கட்டிமுடிப்பதற்குமாக 10 ஆயிர ரூபாவை வட்டுக்கோட்டை தொகுதி எம். பி திரு. அ. திருநாவுக்கரசு ஒதுக்கீடு செய்துள்ளார்.

# நல்லூருக்கு பஜனைப் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் வருடாந்த உற்சவத்தினை யொட்டி, அடியார் கூட்டம், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலிருந்து நல்லைமுருகன் சந்நிதிவரை பஜனை பாதயாத்திரையாக நடாத்தவுள்ளது.

நாளை புதன்கிழமை பகல் நயினையம்பதியிலிருந்து ஆரம்பமாகும் மேற்படி பஜனை யாத்திரையில் பண்ணிசையாளர்களும் சமய அறிஞர்களும் பங்குபற்றுகின்றனர்.


பஜனையாத்திரை கால்நடையாகப் புங்குடுதீவு மற்றும், பெருங்காடு, வல்லை, புங்குடுதீவு கிழக்கு, மடத்துவெளி, கேரதீவு, மண்கும்பான், பண்ணை, சின்னமடு, ... ஆகிய இடங்களுக்கூடாக நல்லூரை வந்தடையும்.

# வடமாகாண அதிபர்கள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்குரிய தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் மீண்டும் ஏகமனதாக 1981-82க்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாகிகள் வருமாறு: தலைவர் திரு க. அருணாசலம் கனகபுரம் விக்ரோறியாக் கல்லூரி, உப தலைவர்; உவ பிரான்சிஸ் ரி. இராஜநாயகம் புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை, செயலாளர்; திரு க. மகாதேவன் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம். பொருளாளர்; திரு செ. குணபாலசிங்கம் சேர் வை. துரைசுவாமி ம. ம. வி. வேலணை. கணக்காய்வாளர்; திரு. ம. முத்துலிங்கம் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம். திருவாசகசபை உறுப்பினர்: திரு வ. நடராசா கோண்டாவில் மேற்கு சைவத் தமிழ் வித்தியாசாலை. திரு ஏ. சச்சிதானந்தன் கைதடி மகாவித்தியாலயம், திரு க. மகேசன் சண்டிலிப்பாய் மகா வித்தியாலயம், திரு வே. சே. நடராசா கட்டைவேலி இந்துக்கல்லூரி, திரு எஸ். ஆர். சண்முகரத்தினம் ஏழாலை மகாவித்தியாலயம், திருமதி ஏ. இராசநாயகம் வேம்படி மகளிர் கல்லூரி, திரு எஸ். எஸ். இராசநாயகம் பிரான்சிஸ் விக்னேஸ்வரா வித்தியாலயம், திரு செ. இராசரத்தினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இந்துக் கல்லூரி திரு வீ. செ. நடராசா ஞானசாரியர் கல்லூரி கரவெட்டி.

PLEASE CONTACT
RAJAN IRON WORKS
No. 8, STANLEY ROAD,
JAFFNA.
0580

# திருமண அழைப்பு

## N-சிவபாலகணேசன்–பரமேஸ்வரி

திரு. திருமதி நடராஜா தம்பதிகளின் புதல்வன்
(தெல்லிப்பளை கிழக்கு)
திருநிறைச் செல்வன்
## ந. சிவபாலகணேசன்
(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை)
அவர்கட்கும்

உடுவில் கிழக்கு ஓய்வுபெற்ற மலாயன் பென்சனர்
திரு திருமதி கு. காசிபர் தம்பதிகளின் ஏகபுத்திரி
திருநிறைச் செல்வி
## சி. பரமேஸ்வரிக்கும்

30-8-81 ஞாயிறு இரவு 10-00 - 1-00 மணிக்கும் இடையில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

மணமகன் இல்லத்தில் 31-8-81 மாலையும் மணமகள் இல்லத்தில் 1-9-81 மாலையும் வரவேற்பு வைபவங்கள் நடைபெறும்.

0730

## மணிவாக்கு

மொழியும் எண்ணமும் இணைபிரியாதவைகள். மொழியின்றி எண்ணமுடியாது; எண்ணுததை மொழிய முடியாது.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## நாட்டின் நிதிநெருக்கடி

பணவீக்கம் நாளுக்கு நாள் அதகரித்துக் கொண்டே போகின்றது. நாற்பது வீதமென்ருல் அதை நம்பமுடியுமா?

ஆம்! அன்ருட வாழ்க்கைக்குத்தேவைப்படும்சாதாரண உணவுப் பொருட்களில் இதனை நாம் காண முடிகிறது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட பற்ருக்குறைகளைச் சமாளிக்க அரசுக்கு முப்பதிஞயிரம் லட்ச ரூபா கடனுகத் தேவைப்பட்டது. அது கிடைத்தது.

சர்வதேச நிதிப்பிரிவும் உலக வங்கியும் எங்கள் நாட்டின் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் இடைநடுவில் ஸ்தம்பித்துவிடக்கூடுமென்றும் நிதிப் பற்ருக்குறையால் இந்த அபாயம் எப்பவும் நேரிடலாமென்றும் கடும் எச்சரிக்கைசெய்துள்ளனர்.

கடன்பெற்று நிலைமையை தற்காலிகமாகச்சீர்படுத்திய போதும், பணவீக்கம் அதன் விளைவாவதால் மக்கள் உயிர் வாழ்தல் இயலாத காரியமாகவே இருந்துவருகிறது.

உலகின் பல பாகங்களில் உள்ள பல நிறுவனங்களிடமும் கடன்பெறக்கூடிய நாணயம் எமக்குண்டு என்பதில் நாம் ஆறுதல் அடைய வேண்டும். இலங்கை வாஞெலியின் செய்திச் சுருளில் முதலிடம் பெறுவது எங்கள் கடன் பெறும் ஆற்றலைப்பற்றிய செய்தியே!

நீண்ட காலத் திட்டம் மூலம் விடிவு காணும் முயற்சிக்கு இவ்வித கடன் வாழ்வு அபாயகரமானது. இந்தப் புத்திமதியை இவ்வரு மூர்த்திகளான - ஐ. எம். எவ் உலக வங்கி சதாகாலமும் எங்களுக்கு உரைத்துவருகின்றன; ஆனல் அது செவிடன் காதில் ஊதிய சங்குபோலிருக்கிறது.

தவிர்க்கமுடியாதநிலையில் தாம் முழந்தாளிட்டு மன்ருடி இந்த உதவியைத் தேடுவதாகவும், நாட்டின் நலன்கருதி அரசாங்க அமைச்சர்களும், அதிகாரிகளும், இவர்களுக்குமேலாக தனியார்துறையினரும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்றும் நிதி அமைச்சர் ரொனி டி மெல் பணிவுடன் வேண்டுகின்ருர்.

இஃதிவ்வாருக நாம் என்ன செய்கின்ருேம்? வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, ஏழைகளைப் பட்டினிபோட எம்மாலியின்றளவுக்குப் பாடுபடுகின்ருேம்.

என்றுமில்லாத அளவுக்கு ஊழல், லஞ்சம் தலையெடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மகாவலித்திட்டமென்ற பெருஞ்சமுத்திரம் அலைமோத இதுதான் தருணம் 'அள்ளை பிடி, தம்பி பிடி' என்று தங்கள் தனிப்பட்ட 'பட்ஜட்'டைச் சீர்படுத்துகிறவர்கள் பலர்; பெரும் புள்ளிகள் பிரமாண்டமான கடத்தலில்ஈடுபட்டு நாட்டுக்குப் பெருந்தொகை நட்டத்தை ஏற்படுத்தி வருகின்றனர். ஏற்றுமதியின் விலைவீழ்ச்சி இறக்குமதியின் விலையேற்றம் இவைக்கு மேலாக அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் திட்டம்போல நாட்டில் நிலவும் அமைதியின்மை நாட்டைக் குட்டிச்சுவராக்குகிறதை பொதுமக்கள் உணருகின்றிலர்.

உள்நாட்டு தனியார் மூலதனம், மக்கள் அயரா உழைப்பு, அரசு துறைகளின் வருமான அதிகரிப்பு சிக்கன வாழ்வு - இவை மூலம் எமது நிதி நெருக்கடியைநீக்குவதே விவேகமான செயல்.

இதற்கு இன்றியமையாத சூழ்நிலை நாட்டின் அமைதிடமே ஒன்றுபட்ட உழைப்புமே. இதற்குப் பங்கம்விளைவிக்கும் கீழ்மக்களைத் தண்டனை அச்சம் உண்டாக்கி தெறுயல் செலுத்துவது அரசின் முதற் கடமையாகும்.

## பண்பட்ட வாழ்க்கை

நாம் இங்கு எழுதுவதால் உலகம் திருந்திவிடுமென்று எண்ணி எம்மை ஏமாற்றிக்கொள்ள விரும்புவதில்லை.

ஆயினும் காலத்துக்கேற்ற கருத்துகளை மீளாய்வதால் நட்டம் எதுவுமில்லை என்ற காரணத்தால் காலத்தால் அழியாத சில உண்மைகளை வாசகர்கள் முன்வைத்தல் நலமென நம்புகின்ருேம்

சான்ருேருக்கு ஒன்றைச் சொன்னுலேபோதும். சமூகத்துக்குப் பயன்படும் காரியம் செய்வார்கள். கீழ் மக்களோ பலாத்காரத்தையே நாடுவார்கள்.

இவ்விரு வர்க்கத்தினருக்கும் வடிவத்தில் வேறுபாடில்லை. ஆனல் குணத்தில் வேறுபட்டவர்கள்; புலியும் பூனையும், எள்ளும் பேயெள்ளும், பன்றியும் பெருச்சாளியும், குதிரையும் கழுதையும், கரும்பும் பேய்க்கரும்பும்- முதலியனபோல்.

மனிதவடிவமே முற்றிலும் கொண்ட கயவருக்கும் மனிதருக்கும் உள்ள வேறுபாடு மிக வியப்பானது. அவர்கள் மனிதர்களே அல்லர்! மனிததேகம் போன்ற வேறுவகை.

இவர்கள் நெஞ்சத்தில் கவலை இல்லை. தீமை செய்தோமோ, அறவழியில்நின்ருேமோ என்கிற கவலை இல்லை.

சட்டத்துக்கும் சமூகக் கோட்பாடுகளுக்கும் கட்டுப்படாதவர் உண்மையில் மிருகத்தைப் போன்றவரே! சட்டத்தால் மட்டுமல்ல சமூக சீர்திருத்த நடவடிக்கைகளாலும் இவர்களைச் சமுதாய வாழ்விற்கு உயர்த்த வேண்டும்.

## இன்று ஸ்ரீதண்டாயுதபாணி திருவிழா

# நல்லூரில் திருமுருக பண்டாரம்

இன்று புதன்கிழமை காலை ஏழு மணியளவில் நல்லூரில் தெய்வ பண்டாரத்தின் திருவிளையாட்டு - ஸ்ரீ தண்டாயுதபாணி உற்சவம் - நிகழ்கிறது. முருகனடியார்கள் யாவரும் கண்டு தரிசிக்க வேண்டிய திருவிழா இது. பாலர்களுக்குக் குழந்தை வேலவனுகவும் இளைஞர்களுக்குப் பாலசுப்பிரமணியராகவும், ஓவியருக்கு ஷண்முகனுகவும், வீரர்களுக்கு தேவசேனுபதியாகவும், இல்லறத்தானுக்கு வள்ளி தேவாசேனும்மணளனுகவும், துறவிகளுக்கு ஆண்டியாகவும் வெவ்வேறு கோலம் கொண்டு பல்வேறு நிலையில் உள்ள மனிதனுக்கு அருள் பாலிக்கிறுன். இக்கோலங்களில் ஆண்டிப் பண்டாரக் கோலம் மிகவும் உன்னதமானதும் கவர்ச்சிகரமானதுமாகும்.

### பழநியில் திருமுருகன் சந்நிதி

பழனி ஆண்டவனின் கருவறைக்கு அடுத்த அர்த்த மண்டபத்தில் நின்று முருகனை பார்க்கும் பேறு பெற்றேன். மேற்கு நோக்கிய திருக்கோலம், அருள்கனிந்த திருநோக்கு, புன்னகை தவழும் திருவாய், மாதாணி துலங்கும் திருமார்பு ஒல்கிய அரையின் வைத்த இடக்கரத்தின் செவ்வியும் திருத்தாள்களின் பொலிவும், திருத்தண்டைகளின் அழகும் காண்போரை பரவசமடையச் செய்யும். அன்பர்கள் பலபலவான திருக்கோலங்கள் புனைந்து நோக்குந்தோறும் நோக்குந்தோறும் புதிய புதிய மண்டலபிரகாசத்துடன் விளங்குவார். பழநி ஆண்டவனின் திருமேனி போக முனிவரால் கலியுக தொடக்கத்தில் அதாவது கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன் ரசகட்டால நவபாஷாணமெனப்படும் ரச

—செ. இரத்தினசபாபதி

[லிங்க] கூட்டினுல் உருவாக்கப்பட்ட மூர்தாமாகும். இந்த மெலிந்த மெழுகு திருஉருவம் பல நூற்ருண்டுகளாக நடைபெற்ற கோடிக்கணக்கான அபிடேகங்களைத் தாங்கிச் சற்றும் சிதையாமலிருப்பது ஓர் அற்புதமாகும். இப்பவும் மாதந்தோறும் கார்த்திகை தினத்தில் மாத்திரம் சுமார் 700 அபிடேகங்கள் நடப்பதாக அறிந்தேன். ஆண்டவன் திருமேனி மீது அபிஷேகிக்கப் பெறும் பால், தேன், சந்தனம் முதலியவற்றைப் பருகுபவர்கள் நோய்கள் நீங்கப்பெற்று நலம்டையும் உண்மையை அடியேனே உணர்ந்தேன்.

வைரங்கள் பதித்த வேல், தங்கம், வெள்ளியினுல் ஆக்கப்பட்ட ரதங்கள், வாகனங்கள், தங்கத்தில் வைரம் பதித்த ஆபரணங்கள், தனித்தங்கத்தால் வேயப்பட்ட மூலவரின் விமானம் பக்தர்கள் அன்பு மேலீட்டினுல் முருகனுக்கு அளித்த காணிக்கைகள்!

நமது நல்லூரில் ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு ஒரு தனிச் சிறப்பும் மெய் அடியார்களை ஈர்க்கும் சக்தியும் உண்டு. நெற்றியில் மூன்று திரு நீற்றுக் கீறுகள் துலங்க வலக்கரத்தில் தண்டாயுதத்தை ஏந்தி இடக்கையை இடுப்பில் ஊன்றி, துறவு கோலத்தில், தலை முண்டிதமாய், உருத்திராக்க மணிவடம் தாங்கி, கோவணம் அணிந்த வடக்கு நோக்கிய திருக்கோலம் முருகன் மாம்பழத்தை இழந்து காவியுடன் பண்டாரக்கோலம் பூண்டு, பெரிய வெள்ளிமயில் மீது வீற்றிருக்கும் திருக்காட்சி போற்றி போற்றி வணக்கத்துக்குரியது. இந்த முருக பண்டாரத்தைப் பற்றி ஒரு பாட்டு - அதில் சில வரிகள்;

''பழனிமலை வாழும் பண்டாரமாம்,
ஞான பண்டாரமாம், தண்டபாணி என்னும்
பண்டாரமாம்
முருக பண்டாரமாம்; பழனி
பண்டாரமாம்''

அப்பண்டாரத்துக்குப் பால் காவடி, பன்னீர்க்காவடி, புஷ்பகாவடி, மச்சகாவடி, ஆட்டக்காவடி சந்தனக்காவடி. இன்னும் அநேக காவடிகள் நல்லூரில் பழனி ஆண்டவர் சந்நிதி முன்னிருந்து புறப்படுவது ஒரு சிறப்புக் காட்சியாகும்.

# நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

[இன்று நல்லூர் ப. நோ. கூ. சங்க மகளிர் குழு சார்பில் கோண்டாவில் ராமகிருஸ்ன வித்தியாலயத்தில் நடைபெறும் கருத்தரங்கினை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.]

"குடும்பங்களில்லாவிட்டால் தேசம் இல்லை தேசம் இல்லாவிடிலோ தேசியக் கல்வியைப் பற்றிப்பேச இடமில்லை. விடுதலைக்காதலாகிய கொள்கைக்கும் மனைவாழ்க்கைக்கும் பொருந்தாது. மனைவாழ்க்கை ஒருவனும் ஒருத்தியம் நீடித்து ஒன்ருகி வாழாவிட்டால் தகர்ந்து போய் விடும். இன்று வேறு மனைவி நாளை வேறு மனைவி என்ருல் குழந்தைகளின் நிலைமை என்னுகும். குழந்தைகளை நாம் எப்படி ஸம்ரக்ஷணை பண்ணமுடியும்? ஆதலால் குழந்தைகளுடைய சம்ரக்ஷணையை நாடி ஏகபத்தினி விரதம் சரியான அனுஷ்டானம் என்று முன்னேரால் ஸ்தாபிக்கப்பட்டது. பொறுமையை உபயோகப்படுத்தி விவாகக்கட்டை நிரந்தரமாகப் பாதுகாப்பதே மனித நாகரிகத்தின் சிறப்பாதலால் நாம் அதற்குரிய ஏற்பாடு செய்வோம்''.

சென்ற நூற்ருண்டில் வாழ்ந்த மகாகவியின் சிந்தனைகள் இவை. பாரத நாட்டுப் பெண்களின் நிலையைப் பற்றிச் சிந்தித்தபோது பாரதி கண்ட முடிவு இது. இன்று வரை எமது சிந்தனைக்கும் விருந்தாக அமைவது.

சமுதாயத்தின் நிலையான இன்பவாழ்க்கைக்கு பெண் விடுதலை இன்றியமைதாதது என்பதை உணர்ந்து பாரதியார் செயற்பட்டார்.

பெண்களுக்குக் கல்விச்சுதந்தரமும் பொருளாதாரச் சுதந்தரமும் கிடைத்துவிட்டால் அவர்கள் நிலை தன்ஞலேயே உயர்ந்து விடும் என்ற கோட்பாட்டை உருவாக்கிஞர்; பிற நாடுகளுக்கும் அவர்கள் சென்று பாரத நாட்டின் அடிமைத்தனத்தை நீக்கப் பாடுபட வேண்டுமென்று எண்ணினுர்.

உலகவாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓதும்பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சேர்ந்து புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலால் நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திட வேண்டுமாம்
விலகி வீட்டில் ஓர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பரம்

என்ற பாரதியின் கவிதை அடிகள் பெண்ணின் முன்னேற்றத்தைப் பற்றிய சில கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றன. வீட்டுவாழ்க்கையில் இல்லறத்தை நடத்தும் துணையாக மட்டும் பெண் வாழ்வது போதாது. நாட்டு வாழ்க்கையில் பொதுமக்களது நலம் பேணி உழைக்கவும் அறிவு பெறவேண்டும். தான், தனது குழந்தைகள், தனது குடும்பம் என்ற வட்டத்துள் தன் சிந்தனைகளைச் செலுத்தாது பரந்த அடிப்படையில் பலவற்றைப்பற்றியும் சிந்திக்கவேண்டும்.

''வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா
மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்கள் அறமடா''


என்ற அவரது கருத்துக்களில் மண உறவு ரீதியாக பெண்களுக்கு ஏற்படும் பெருமையைக் காட்டுகின்ருர். மனைவி, தாய் என்ற இருபெரும் பதவிகளைப் பெண் தன் வாழ்க்கையில் வகிக்கவேண்டியவள். அப்பதவிகளை அவள் தனக்காக வகிப்பதில்லை. பிறருக்காகவே வகிக்கின்ருர். சாதம் படைக்கின்ற சாதாரணக் கைகளால் தெய்வச் சாதியினரையும் உருவாக்கும் அவன் ஆற்றலைப் பாரதி எடுத்துக் காட்டுகின்ருர்.

''கற்புநிலை என்று சொல்ல வந்தால் இரு
கட்சிக்குமஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்''

கற்பு, திருமணம் என்ற சொற்ருெடர்களும் பெண்ணின் வாழ்க்கையில் மட்டும் அர்த்தமுள்ளவைகளாக ஏன் அமையவேண்டும் எனப் பாரதி சிந்தித்தார். தன்னுல் செய்ய முடியாத ஒன்றுக்காகப் பெண்ணைப் பலியாக்கும் தர்மத்தை ஆண் ஏற்றுக்கொண்டதைப் பாரதி கண்டிக்கிருர். மனிதனையே தெய்வமாக்கவல்ல பெண்ணின் அறிவினையும் தகுதியையும் ஆண் மதிக்க வேண்டும். ஆண் தன் அறியாமையினுல் பெண்களின் அறிவைக் கெடுத்துவிட்டான் என்ற உண்மையைப் பாரதி தான் முதன்முதலாக உலகிற்

[6ம்பக்கம் பார்க்க]

—மஞேன்மணி சண்முகதாஸ் எம். ஏ.—
தலைவி - மகளிர் குழு, ந. ப. கூ. சங்கம்



## இன்று நல்லூர்க் கந்தன் 22-ம் திருவிழா

காவிக் கமலக் கழலுடன்
சேர்த்தெனைக் காத்தருள்வாய்
தூவிக் குலமயில் வாகனனே
துணை ஏதுமின்றித்
தாவிப் படரக் கொழு
கொம்பு இலாத தனிக்கொடிபோல்
பாவித்தனிமனந் தள்ளாடி
வாடிப் பதைக்கின்றதே
- கந்தர் அலங்காரம்

# நவீன 'றேடார்' விமானங்களை

## சவூதிக்கு அமெரிக்கா வழங்கும்

வாஷிங்டன், ஆக. 25

சவூதிஅரேபியாவிற்கு நவீன "றேடார்" யுத்தவிமானங்களை வழங்கும் திட்டத்தை ஒழுங்காக நடத்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. றீகன் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவிற்கு ஐந்து நவீன 'றேடார்' விமானங்களை வழங்குவது பற்றி அமெரிக்க காங்கிரஸிற்கு தான் அறிவித்துள்ளதாகவும் திரு. றீகன் தெரிவித்தார்.

அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையினதும், காங்கிரஸினதும் அனுமதியை பெறும் பட்சத்திலேயே றீகன் இத் திட்டத்தை அமுல்செய்ய முடியுமென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தார்.

ஜனாதிபதி றீகனின் இத் திட்டத்தை இஸ்ரேல் கடுமையாகக் கண்டித்துள்ளது.

சவூதிஅரேபியாவிற்கு நவீன "றேடார்" விமானங்களை வழங்கும் றீகனின் முடிவானது சவூதி அரேபியாவில் தற்போது இருக்கும் "எப் 15" ரக யுத்த விமானங்களின் வலுவை மேலும் அதிகரிப்பதாக அமையுமென்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வெ)

# 'காங்கிரஸ்யூ' கட்சித்தலைவர்: 'அர்ஸ்' ராஜினாமா

புதுடில்லி, ஆக. 25

"காங்கிரஸ யூ"வின் தலைவர் பதவியிலிருந்து திரு. தேவராஜ் அர்ஸ் ராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் தனது ராஜினாமா பற்றி கட்சியின் செயற்குழுவிற்கு அறிவித்துள்ளார். இவரின் ராஜினாமா பற்றி முடிவெடுக்கும் பொருட்டு கட்சியின் செயற்குழு இன்றுகூடி ஆராயவுள்ளது.

திரு. தேவராஜ் அர்ஸ் தனது ராஜினாமாவிற்கான காரணங்கள் பற்றி எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

பிரதமர் இந்திரா காந்தியின் தீவிர ஆதரவாளராக இருந்து வந்த திரு. தேவராஜ் அர்ஸ், இந்திராவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியிலிருந்து 1979ம் ஆண்டு விலகி, "காங்கிரஸ்யூ" என்ற புதிய கட்சியை ஆரம்பித்தது தெரிந்ததே.

கட்சியின் தலைமைப் பதவி தொடர்பாக உறுப்பினர்கள் மத்தியில் எழுந்த வேறுபாட்டைத் தொடர்ந்தே இவர் "காங்கிரஸ்யூ" கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்ததாகக் கூறப்படுகிறது. (வெ)

## பொலிஸ்-தீவிரவாதிகள் மோதலில் மூவர் பலி!

### 9 பொலிசார் படுகாயம்

சென்னை, ஆக. 25

வட ஆற்காட்டில் தீவிரவாதிகளுக்கும் பொலிசாருக்குமிடையே நடைபெற்ற மோதலில் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்றும் 2 சப் இன்ஸ்பெக்டர்களும் 7 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரை மணித்தியால துப்பாக்கிச் சண்டையின் முடிவில் 3 தீவிரவாதிகள் பலியானார்கள் என்றும் ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## நிவாரணமாக ரூ. 300 உதவி

[மட்டக்களப்பு]

பட்டிருப்பு - அம்பாறை எல்லைப் பகுதியில் இருந்து வெளியேறிய தமிழ்க் குடும்பங்கள் மீண்டும் அப்பகுதிகளில் சென்று குடியேறி வாழ்வதற்காக முதற்கட்ட நிவாரண உதவியாக சமூக சேவைத் திணைக்களத்தினால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்னூறு ரூபா வழங்கப்படவுள்ளதாக களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் திரு. எம். மௌனகுருசாமி தெரிவித்தார். [க]

பாகிஸ்தான், ஈரானுடன்

## பேச்சுவார்த்தைக்கு ஆப்கான் தயார்

### வெளிநாட்டமைச்சர் தகவல்

காபூல், ஆக. 25

பாகிஸ்தானுடனும், ஈரானுடனும் பேச்சுவார்த்தை நடத்த ஆப்கானிஸ்தான் தயாராகவுள்ளதாக அந்நாட்டு வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. சபையின் ஆதரவுடன் இம்முக்கூட்டுப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். காபூலிலிருந்து சோவியத் துருப்புக்களை திருப்பியழைப்பது தொடர்பாகவும் இப் பேச்சுவார்த்தையின் போது பிரஸ்தாபிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

1979 டிசம்பர் மாதம் சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானிற்குள் பிரவேசித்த பின்னர், பாகிஸ்தான் முதல் முறையாக இப்பொழுதுதான் ஆப்கானிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

ஆப்கானிஸ்தானின் உள்விவகாரங்களில் பாகிஸ்தானும், ஈரானும் தலையிடுவதில்லையென்று உறுதியளிக்கவேண்டுமென்று இவ்விரு நாடுகளையும் ஆப்கானிஸ்தான் கேட்டுள்ளது. (வெ)

## சம்பளம் வழங்கப்படவில்லை

[கோண்டாவில்]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை கோக்குவில் உபபணிமனையில் கடமையாற்றுகின்ற நடுக்கட்டு உத்தியோகத்தர்களுக்கு கடந்த மாதச் சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை.

முன்பு பத்தாம் திகதிக்கு முன்னர் தமது மாதச் சம்பளப் பணத்தை இவர்கள் பெற்றுக் கொள்வது வழக்கம். இது பற்றி ஊழியர்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

## மாவட்ட போட்டிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கல்விவட்டாரப் பாடசாலைகளின் சங்கீத, நடன, நாடகப் போட்டிகள் கன்னாதிட்டி இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற நிகழ்ச்சிகள் மாவட்டப் போட்டிகளில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்டுள்ளது. [மா]

## மீன்பிடி உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் மானிய அடிப்படையில் கடற்றொழில் அமைச்சினால் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக மீன்பிடி வலைகளும் தோணிகளும் இம்மாதம் 30ம் திகதி வாழைச்சேனையிலும், 31-ம் திகதி மட்டக்களப்பிலும் மீனவர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவினால் கையளிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர் திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா மேற்கொண்டு வருகின்றார். [க]

## பூசைநேர மாற்றம்

[யாழ்ப்பாணம்]

கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலயத்தில் இரவு 8 மணிக்கு நடைபெறும் செவ்வாய், வெள்ளிக்கிழமை சிறப்பு அலங்கார பூஜை இன்று முதல் இரவு 7 மணிக்கு நடைபெறும். ஸ்ரீசக்கரமேரு பூஜை ஒவ்வொரு பௌர்ணமியிலும் பிற்பகல் 4-30 மணி முதல் நடைபெறும்.

## விவசாயிகள் உண்ணாவிரதம்

சென்னை, ஆக. 25

தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு தலைமையில் சுமார் 600 விவசாயிகள் தமது ஒன்பது அம்சக்கோரிக்கையை வலியுறுத்தி மின்சார அலுவலகங்களுக்கு முன்னால் நேற்று உண்ணாவிரதமிருந்தனர். [இவ]

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 10-ம் திகதி

புதன்கிழமை

(26 - 8 - 81)

மேடம்: ஆசை அலைகளால் அலைபெறுவதற்கு இடமுண்டு. குறுக்குவழிகளில் இறங்கவேண்டாம். வீட்டில் சிறு பிணி தலைதூக்கும். சிறிய விடயத்துக்குக்கூட பெரிய கோபம் தோன்றக்கூடும்.

இடபம்: வாழ்க்கையில் இன்று முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வாகன விருத்திக்கு இடமுண்டு. நீர்ப்பாசனப்பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம்.

மிதுனம்: புதிய பாதை வழிபிறக்கும். புத்திரசுகமும் உண்டு. இதயத்தில் இன்பம் பொங்கும். இல்லத்தில் இனிமை தங்கும்.

கடகம்: எதிரிகள் விழிப்புடன் காத்திருப்பர். ஏகாந்தின் சாயல் உண்டு. ஆத்திரத்தை அடக்கினால் அமைதிக்கு இடமுண்டு.

சிம்மம்: குடும்பம் இன்று கலைக்கோவிலாக மாறும். இசைத்துறையில் இன்று ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு.

கன்னி: செய்தொழிலில் சிரமங்கள் தோன்றக்கூடும். உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம். நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடுவதற்கு முயலக்கூடும். அவதானம் வேண்டும்.

துலாம்: இதயத்திற்கு இதம் தரும் செய்தியொன்று கிடைக்கலாம். புண்ணிய கருமங்களில் விருப்பம் ஏற்படும். ஸ்தல யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

விருச்சிகம்: வித்தை தயில் வெற்றிகாணும். வேண்டியது கிடைக்கும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும்.

தனு: கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து செய்திகிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும். நிதானம் வேண்டும்.

(5-ம் பக்கம் பார்க்க)


# இலவசம்!

## விசேஷ அசொட்றின் 20 T - சேட்டுகளைப்பெற இன்றே விரையுங்கள்

லேபலுடன் இரண்டு அசொட்றின் வெற்றுப் போத்தல்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள லங்கெம் வியாபாரிகளிடம் கொடுத்து, கண்ணைக் கவரும் அசொட்றின் T-சேட்டைப் பெறுங்கள்.

லங்கெம் சிலோன் லிமிட்டெட்,
தலைமை நிலையம், கொழும்பு-9.

கிளைகள்: யாழ்ப்பாணம், அனுராதபுரம்,
குருநாகல், கல்முனை, மாத்தறை.

சி. ஏ. ஜூவிஸ் கம்பனி,
களுத்துறை.
ஸ்ரீ பாலசுப்பிரமணியம் அன் கோ,
ஹப்புத்தளை.
குடாவெல்ல ஸ்டோர்ஸ்,
அம்பலாந்தோட்டை.
பெருந்தோட்டப் பொருள் கூட்டுத்தாபன லிமிட்,
கண்டி.
நீர்கொழும்பு அப்போதிக்கரிஸ்,
நீர்கொழும்பு.
பத்துல அன் கோ,
பெலியத்த.
வி. வடிவேல் அன் பிறதர்ஸ்,
நுவரெலிய
டி. டி. அத்துகோறள, அன் சன்ஸ்,
கேகாலை.
விஜயா மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
மாத்தளை.
நியூ இந்தி பேக்கரி அன் ஸ்டோர்ஸ்,
அம்பாறை.
கிருபாராஜா சன்ஸ்,
வவுனியா.
நந்தா ஸ்டோர்ஸ்,
பலாங்கொடை.
பயனியர் ஸ்டோர்ஸ்,
பதியபலல்ல.
லங்கா பொல்ஹோர கடை,
பதுளை.
ஹமீட் ஹுசைன் அன் கோ,
புத்தளம்.
ஷாபினாஸ்,
பொலன்னறுவை.
நியூ சதர்ன் பேர்டிலைசர்ஸ்,
காலி.

தாமதியாதீர்கள்—குறிப்பிட்ட தொகையே கைவசம் உள்ளது.

SHELL LANKEM

## இன்றையபலன்...

(4-ம் பக்க தொடர்ச்சி)

மகரம்: எண்ணத்தில் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணாக்கும். அற்ப விடயத்திற்குக்கூடப் பொல்லாங்கு கேட்க நேரிடும். தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள். கோபத்தை அடக்கவும்.

கும்பம்: தேனும் இனித்தது இன்று வேம்பாகக் கசக்கும். மனப்போராட்டத்திற்கு இடமுண்டு. அதிக சிந்தனைக்கு இடமளியாது அமைதியுடன் இருக்கவும்.

மீனம்: போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள். எதிலும் நிறைவு தென்படும். முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டும். குடும்பத்திலும் அன்பு தழைக்கும்.

சோதிடமணி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# மீண்டும் குதிரைப்பந்தயம்: நாட்டுக்குநன்மைபயக்குமா?

ஆடம்பர விளையாட்டுக்களில் ஒன்றான குதிரைப் பந்தயம் பன்னிரண்டு வருடகால இடைவேளைக்குப் பின்னர் தற்போது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா குதிரைப்பந்தயத் திடலில் வெகு கோலாகலமாக இப்பந்தயம் ஆரம்பித்து வைக்கப்பட்டு, பல சிறந்தரக வெளிநாட்டுக் குதிரைகள் பங்குபற்றுத்தப்பட்டன.

குதிரைப் பந்தயத்தினை மீண்டும் இலங்கையில் ஆரம்பித்து வைக்கும் வகையில் பிரதி நிதியமைச்சர் ஜனாப். எம். எச். எம். நெய்னா மரிக்கார் பாராளுமன்றத்தில் இதற்கு ஆதரவாக உரையாற்றி அனுமதி வழங்குமாறு வாசகர்கள் அறிந்ததே.

குதிரைப் பந்தயத்தின் தற்போதைய முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்ட பிரதி அமைச்சர் ஜனாப். மரிக்கார், இப்பந்தயம் ஒருபோதும் இலங்கையில் தடை செய்யப்படவில்லை என்றும், ஒருசில ஒழுங்கீனங்களும், வசதியீனங்களும் காரணமாகவே இடைநிறுத்தப்பட்டிருந்ததெனவும் குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய பந்தயத்தின் மூலம் பல நன்மைகளை எதிர்பார்க்க முடியும் எனவும், இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் சிறந்த ரகக் குதிரைகள் அவசியமாகவிருப்பதாகவும், இவற்றை இறக்குமதி செய்து பராமரிப்பதில் இச்சேவைகளின் நிலைக்களத்தவருக்கு கணிசமானளவு செலவினங்கள் ஏற்படுவதாகவும் அமைச்சர் விளக்கினார். இச்சேவைகளை சமாளிக்குமுகமாக குதிரைப் பந்தயங்களை ஆரம்பிப்பதன் மூலம் தனியார் சிறந்த இனக் குதிரைகளை வாங்க முற்படுவரேன்றும், பின்பு உள்நாட்டில் இவர்களிடமிருந்து அரசாங்கம் மலிவாகக் குதிரைகளைக் கொள்வனவு செய்யமுடியுமெனவும் தெரிவித்தார்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்த வெளிநாட்டுத் தோட்டத் துரைமார்களும், உள்நாட்டுத் தனவந்தர்களும் குதிரை வளர்ப்பதையும் பந்தயத்திற்காக ஈடுபடுத்துவதையும் ஒரு முக்கிய பொழுதுபோக்காகக் கொண்டனர்.

இதனை ஒத்த முறையிலேயே போட்டிகளும் இடம்பெற்று வந்துள்ளது. விவசாய அமைச்சர் திரு. ஈ. எம். சேனநாயக்கா, இலங்கையின் பெரும் வர்த்தகப் பிரமுகர் திரு. உபாலி விஜேவர்த்தனா போன்ற பெரும்புள்ளிகளின் குதிரைகளோடும் ஏனைய முக்கியஸ்தர்களின் குதிரைகளோடும் போட்டிகள் ஆரம்பமாகின. திரு. உபாலி விஜேவர்த்தனாவுக்கு 50,000 ரூபா பெறுமதியான வெற்றிக் கோப்பை இப்போட்டியில் கிடைத்துள்ளது.

பா. அனந்தகிருஷ்ணன்

இப்போட்டிகள் இலங்கையின் பொருளாதாரத் துறைக்குப் பெரும் நன்மைகளை நல்கக் குதிரை அபிவிருத்தி மூலம் பெருமளவு செல்வம் கிடைக்க முடியுமெனவும் இந்நாட்டின் வர்த்தகர்கள் அறிவித்திருப்பது வரவேற்கக்கூடியதே.

பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்காதது உண்மையான லாபநோக்கத்தினையும், சிறந்த விளையாட்டுக்களில் ஒன்றான இப்போட்டிகளை எதிர்நோக்கும் பொதுமக்கள் இத்தகைய பந்தயங்களின் வருகையாலும் நடாத்துகைகளும் எவ்வளவு தூரம் நாட்டிற்காகவும் தேவைகளுக்காகவும் பங்கு போட்டப்படுகின்றது என்பதனை அறிந்தே தமது தீர்ப்பினை வழங்குவர்.

## அடுத்தமாதம் 120 வீடுகள் கையளிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தின் 4-வது வருடாந்த பூர்த்தியையொட்டி தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் அடுத்த மாதம் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் குடியிருப்பவர்களுக்கு உத்தியோக பூர்வமான முறையில் கையளிக்கப்படவிருக்கின்றன.

மாவட்டத்தில் உள்ளாகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறிமுறைத் தொகுதிக்கு 30 வீடுகள் வீதம் மொத்தம் 120 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கடந்த ஜூலை 22 ம் திகதி வழங்கப்படவேண்டிய மேற்படி வீடுகள் வேலைகள் பூர்த்தியடைய தாமதமானதால் அன்றைய தினம் வழங்கப்படவில்லை.

(அ)

## மட்டக்களப்பு ஆசிரியர்கள் சம்பளம் தாமதம்

(மட்டக்களப்பு)

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்குச் சம்பளம் உரிய நேரத்தில் வழங்கப்படுவதில்லை என்று ஆசிரிய வட்டாரங்களிலிருந்து புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் திறைசேரியில் இருந்து வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் அதிகாரக் கடிதம் தாமதமாக வங்கிகளுக்குக் கிடைப்பதாகும்.

ஆசிரியர்களுக்கு 20ம் திகதி சம்பள தினம். இதன் பிரகாரம் கல்வித் திணைக்களம் இதற்கு முன்தினம் கிடைக்கக் கூடியதாகப் பாடசாலை அதிபர்களுக்குக் காசோலைகளை அனுப்பி வைக்கின்றது. அதிபர்கள் காசோலையை மாற்ற சம்பள தினத்தன்று வங்கிகளுக்குச் செல்லும் திறைசேரியிலிருந்து அதிகாரக் கடிதம் இதுவரை கிடைக்கவில்லை என்று பணம் கொடுக்க மறுக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் அதிபர்கள் அன்றைய தபால் பை வந்ததும் வங்கி வரை வாசலில் காத்திருந்து அதிகாரம் வந்தவுடன் காசோலையை மாற்றிச் செல்கிறார்கள்.

[இ]

## "கிராமம்முன்னேற மக்கள் வாழ்வுஉயர்ச்சி அவசியம்" கருத்தரங்கில் பேராசிரியர் கருத்து

(கடுப்பிட்டி)

"கிராமத்தின் முன்னேற்றத்திற்கு அக்கிராமத்தில் வாழுகின்ற மக்களது வாழ்க்கைத்தரம் அபிவிருத்தி அடைய வேண்டியது மிகமிக அவசியமானது."

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகத் புவியியற்றுறைப் பேராசிரியர் டபிள்யூ எச். ஜெயசிங்கம் அதிரி சமூக பொருளாதார ஆய்வுக் கருத்தரங்கை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பேராசிரியர் ஜெயசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அபிவிருத்தி என்பது வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயைக் கூட்டுவதில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. வருவாய் அதிகமாக் கிடைத்தாலும், இடதன், தடைகள் வாழ்க்கையில் ஏற்படக்கூடாது. சந்தோஷமான வாழ்க்கை திருப்தியான வாழ்க்கை கிடைக்க வேண்டும்.

"மக்கள் சந்தோஷமாக வாழ்வதற்கும், கிராமம் முன்னேற்றம் அடைவதற்கும் மக்கள் சுகபலம் மிக்கவர்களாகவும், மூயற்சியுள்ளவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும் விளங்குவதுடன் ஒன்றிணைந்த சமுதாய அபிவிருத்தியும் நடைபெற வேண்டும்.

"கிராம அபிவிருத்திக்கு கிராம மக்களின் வாழ்க்கைப் பாதையிலுள்ள குறைபாடுகள், பிரச்சினைகள் என்பவற்றை நீக்கி மக்களது பூரண ஒத்துழைப்புடன் திட்டமிட்டு திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

பேராசிரியர் திரு என். பாலகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:

"அபிவிருத்தி என்பது மக்களைப் பற்றியது. அது மக்களுக்கே உரியது. ஏற்றத்தாழ்வுகள் இல்லாத வகையில் சமூக பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்வதும் அபிவிருத்தி என்று கூறலாம்.

"இலங்கை போன்ற நாடுகளில் கிராமப்புறங்களிலேயே கூடுதலான மக்கள் வாழுகின்றார்கள். இலங்கையில் எழுபத்தைந்து வீதம் மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

"சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் இன்றியமையாதது. அபிவிருத்தி என்ற தத்துவப் போராட்டம் வறுமைக்கு எதிரான போராட்டமாகும். இந்த வறுமையின் பெரும்பகுதி கிராமப்புறங்களில்தான் உண்டு நகர்ப்புறங்களிலும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

கல்வி, சுகாதார, மலசல கூட வசதிகள் இல்லாததில் மூன்றிலொரு பங்கு உலகநாடுகளில் கிராமப்புறங்களில்தான் இருக்கின்றது. இதற்கு இலங்கையில் நாற்பதுவீதம் கிராமப்புறங்களில் இருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

"கிராமிய மட்டத்திலான அபிவிருத்திக்குத் திட்டம் தயாரிப்பதற்கு முதலில் கிராமத்திலுள்ள மக்களிடையே அபிவிருத்தி முயற்சி இருத்தல் அவசியம். இதற்கு கிராம அபிவிருத்தி நிறுவனங்கள் சரிவர செயல்படவேண்டும்" இவ்வாறு அவர் பேசினார்.

இன்னும் பல கருத்துரை வழங்கினர்.

(அ)

வெலிங்டன் (நாவாந்துறை) தினசரி 2-30, 6-30
திசைமாறிய பறவைகள்

ராகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரஞ்சன்-ராஜகுமாரி
சந்திரலேகா

6 வது வெற்றி வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சந்திரபாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

வெலிங்டன்
தினசரி 4 காட்சி
வெகுளிப் பெண்

லிடோ யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சாந்தி (யாழ்.நகர்) 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். — ராதாசலூஜா
இதயக்கனி
—புத்தம் புதிய பிரதி—!
Await "THE BRAVE BUNCH" Adults

மனோகரா (பருத்தித்துறை) தினசரி 10-30, 2-15, 6-30, 9-45
பாக்யராஜ்-அருணா-முருகன்
ஒரு கை ஓசை

வெற்றிகரமான 6-வது வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மென் கலர்)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
காமினி ஸ்ரீபிரியா
ராதாசலூஜா தேங்காய்
நம்பியார் நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
(ஈஸ்ட்மென் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர் பாக்கியராஜ் சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ் நகர்)
மஞ்சுபார்கவி — துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

## அழித்தெழுதாத் தனித் தலைவர் அமிர்தலிங்கம்

கலை என்றால் பரதத்தின் நினைவே தோன்றும்
கல்லென்றால் வைரத்தின் நினைவே தோன்றும்
மலை என்றால் இமயத்தின் நினைவே தோன்றும்
மலரென்றால் கமலத்தின் நினைவே தோன்றும்
அலை என்றால் ஆழ்கடலின் நினைவே தோன்றும்
அறிவென்றால் அண்ணாவின் நினைவே தோன்றும்
தலையென்றால் விடுதலையின் நினைவே தோன்றும்
தலைவனென்றால் தமிழன் அமிர் நினைவே தோன்றும்

க. பொ. நடனசிகாமணி

## லட்சார்ச்சனையும் திருவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை கில்னர் ஒழுங்கை மகாமாரி அம்பாளுக்கு லட்சார்ச்சனையும் மணவாளக்கோல விழாவும் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது. வெள்ளியன்று சங்காபிஷேகமும் அம்பாள் வெளிவீதிஉலா வருதலும் இடம்பெறும்.

## மாநகரசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற மாதாந்தக்கூட்டம், இம்மாதம் 31ம் தேதி நடைபெறவிருக்கிறது. [க]

## நல்ல...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குத் தெளிவாகஎடுத்துக்காட்டுகின்றார். 'மண்ணுக்குள்ளே சில மூடர் மாதர் அறிவைக் கெடுத்தார்' என்ற பாரதியின் குற்றச்சாட்டு மனித நாகரிக வளர்ச்சிப் பாதையைப் பின்னோக்கிப் பார்க்கும்போது தெட்டெனத் தெரிகின்றது. பாரதியின் கருத்துக்களை இன்று நாம் சிந்திக்கும்போது வெறுமனே கருத்தடிப்படையில் அதனை நோக்காது காரியத்துடனும் இணைந்து நோக்க வேண்டும். பெண்விடுதலைக்காகப் பாடுபட்ட பாரதி இவ்வுண்மையை வெளிக்கொணர்ந்தார். பெண்ணின் உரிமைகளைப் பாதுகாக்கப் பத்துக் கட்டளைகளை வகுத்துவைத்தார். (நாளை இதழில் முடியும்)

## எதிர்க்கட்சித் தலைவர் தலைமை: ஆலாட்சி அதிகாரி யோசனை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவுசெய்யப்படுபவர் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கக்கூடிய நிலையிலுள்ள கட்சியின் தலைவராக இருக்கவேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகமும், புதிய ஆலாச்சி அதிகாரியுமான திரு. சாம் விஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

மொறட்டுவ சர்வோதய காரியாலயத்தில் தலைமைக நடந்த சர்வோதய சிரமதான இயக்கக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. விஜயசிங்கா மேலும் கூறியதாவது:

தற்போதுள்ள பாராளுமன்றத்தில் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கக்கூடிய நிலையிலுள்ள கட்சி சுதந்திரக் கட்சியாகும். ஆதலால் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவே எதிர்க்கட்சித் தலைவியாக ஆரம்பத்தில் தெரிவுசெய்யப்பட்டிருக்கவேண்டும்.

எதிர்க்கட்சிப் பெரும்பான்மைக் குழுவின் தலைவர் என்ற காரணத்தினால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் அவர் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. அவரும் அதனை அறிந்திருக்கிறார். அதனால் அவர் பிரச்சினைகளை உருவாக்கும் வேறு நோக்கங்கள் கொண்ட மாறுபட்ட எதிர்க்கட்சித் தலைவராக வந்துள்ளார்.

சர்வோதயத் தலைவர் திரு. ஏ. ஆரியரத்ன இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்தார் (ல)

## ஆசிரியர் சங்கம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள செய்தியில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

''தமிழினத்தின் தனிப் பெரும் பங்கினரான ஆசிரிய சமூகத்தின் அவலநிலை துடைத்து ஆரோக்கிய தொழில் வாழ்க்கைக்கு தலைவர் திரு. அமிர்தலிங்கம் எப்பொழுதும் முன்நின்று உழைத்து வந்திருக்கின்றார். இனத்தின் வளர்ச்சியிலும் விடுதலையிலும் ஆசிரிய சமூகத்திற்கு பெரும் பங்கு உண்டு என்பதை தலைவர் என்றும் வலியுறுத்தி வருவது மட்டுமல்ல அதனை ஆவலுடனும் எதிர்பார்ப்பவர். அன்னாரின் எதிர்பார்ப்புக்கு தமிழர் ஆசிரிய சமூகமும் தன் பங்களிப்பை என்றும் தாராளமாக கொடுத்துவந்திருக்கின்றது

''நாம் அழைத்த பொழுதெல்லாம் எமது அழைப்பைப் பெருமையுடன் ஏற்று ஓடோடி வந்து உதவியுள்ளார். அன்னாரின் பிறந்த நாளான இன்று அவர்களை நீடு வாழ்க என உலகத் தமிழர்களுடன் சேர்ந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் வாழ்த்துகின்றது.''

## நிறைவேற்றுக்குழு இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் இன்று யாழ் செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட மந்திரி திரு. யூ. பி. விஜயகோன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் நிறைவேற்றுக்குழு உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் பற்றி ஆராயப்படுமெனத் தெரிகிறது. (மா


பழகப் பழகப் பணத்தைப் பெருக்கும்

# ஹோம் பினன்ஸை நினைவில் வையுங்கள்

திரவியம் தேடும் தருணம் இதுவே

# ஹோம் பினன்ஸ் லிமிட்.

82, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 8310

ரூபா 1000/-க்கு மேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வருமானத்தை வழங்குகிறது.

**30%** வருட முடிவில் வட்டி பெறுவோர்க்கு வருடம் 25 % வீத வட்டியும் 3 % வீத போனஸும் 2 % வீத சேமிப்பும் ஆக மொத்தம் 30 % வீத வருமானம் வழங்கப்படும்.

**28%** மாதாமாதம் வட்டி பெறுவோருக்கு வருடம் 25 % வீத வட்டியும் வருட முடிவில் 3 % வீத போனஸும் ஆக மொத்தம் 28 % வீத வருமானம் வழங்கப்படும்.

இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்.

ஹோம் பினன்ஸ் நம்பிக்கையின் இல்லம்

# ஹோம் பினன்ஸ் லிமிட்.

தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3

தொலைபேசி: 89190


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.